**O.S.No. 387/2019**

**PW 1:** பிரபு தேதி 25.02.2026

வாசா.1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, 1 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

தாவா சொத்து எனது பாட்டி மருதபுஷ்ம்மிற்கு 20.8.1960 தேதிய கிரைய பத்திரத்தின்படி அவருடைய சுயாரிஜித சொத்துக்கள் என்றால் சரிதான். அந்த சொத்தை பொறுத்து அவர் விருப்பப்படி அவர் விற்க உரிமை உள்ளது என்றால் சரிதான். 12.1.65 ஒரு உமாமகேஸ்வரன் என்பருக்கு உரிய மறுபயன்பெயரில் கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். 12.1.65 தேதியில் இருந்து என் பாட்டி மருதபுஷ்பத்திற்கு எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரிதான். அந்த உமாமகேஷ்வரன் 25.10.71 தேதியில் ஒரு வி.சென்னியப்பன் என்பருக்கு கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரிதான். சென்னியப்பன் கிரையம் பெற்ற பிறகு அவர் தான் சொத்தை அனுபவத்து வந்தார் என்றால் சரிதான். சென்னியப்பன் வாரிசுகளிடமிருந்து என் தந்தை சக்திவேல் பெரியப்பா சுவாமிநாதன், என் சித்தப்பா செந்தில்சுப்பிரமணியம் என்பவர் கிரையம் வாங்கினார்கள் என்றால் சரிதான். சென்னியப்பனின் அனைத்து வாரிசுகளிடமிருந்தும் கிரையம் வாங்கவில்லை, சென்னியப்பனுக்கு 7 வாரிசுகள் அவர்களில் 5 பேர்களிடம் மட்டும் கிரையம் வாங்கப்பட்டது. அவ்வாறு கிரையம் வாங்கியதில் சக்திவேல், சுவாமிநாதன், செந்தில்சுப்பிரமணியம் என்பவர்களுக்கு தலா 1/3 பாத்தியம் என்றால் சரிதான். அவர்கள் கிரையம் பெற்ற வகையில் அவர்களுக்கு தலா 1/3 பங்கு உரிமை ஏற்படுகிறது என்றால் சரிதான். அந்த சொத்துக்களை பொறுத்து அவரவர் அனுபவத்தில் இருந்ததை 3ம் நபர்களுக்கு விற்க அவர்களுக்கு உரிமை உள்ளது என்றால் பாகப்பிரிவினை செய்து விற்றுக்கொள்ளலாம். அது கிரையம் வகையில் பாத்தியம் என்பதாலும், இந்து வாரிசுரிமை பாத்தியப்படாத சொத்துக்கள் என்பதாலும் அவர்கள் இஷ்டம் போல் சொத்தை அனுபவிக்கவும், விற்கவும் உரிமை உள்ளது என்றால்

சரியல்ல. தாவா சொத்துக்கள் விவசாய பூமிகள் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் எவ்வளவு விஸ்தீரணத்திற்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சுமார் 6 ½ ஏக்கர். சக்திவேல், சுவாமிநாதன், செந்தில்சுப்பிரமணியம் என்பவர்கள் தனித்தனியாகவா அல்லது கூட்டாக அனுபவம் செய்தார்களா என்றால் கூட்டாக அனுபவம் செய்தார்கள். மேற்படி சொத்திற்கு பட்டா, சிட்டா வருவாய்துறை ஆவணங்கள் யார் பெயரில் உள்ளது என்றால் தற்போது என் அப்பா சக்திவேல் பெயரிலும், தற்போது கிரையம் பெற்ற 9 மற்றும் 10 பிரதிவாதிகள் பெயரில் உள்ளது. முன்கிரையதாரர்கள் ஆன உமாமகேஷ்வரன் மற்றும் சென்னியப்பன் பெயர்களில் வருவாய் துறை ஆவணங்கள் மாற்றம் ஏற்பட்டதா என்றால் அது எனக்கு தெரியாது. சக்திவேல், சுவாமிநாதன், செந்தில்சுப்பிரமணியம் ஆகியோர் பெயரில் வருவாய்துறை ஆவணங்கள் பெயர் மாற்றம் ஆனதா என்றால் அது எனக்கு தெரியாது. மேற்படி மூவரும் சேர்ந்து சொத்திற்கான வரி செலுத்தியுள்ளார்களா என்றால் தெரியாது. என் தாத்தா வி.எம்.கைலாசம் என்பவருக்கு சொத்துக்கள் அதிகம் இருந்தது என்றால் இருந்திருக்கலாம். அந்த சொத்துக்களை பொறுத்து பாகப்பிரிவினை ஆனதா இல்லையா என்றால் சில சொத்துக்களுக்கு பாகபிரிவினை ஆகியிருந்தது சில சொத்துக்கள் பாகபிரிவினை ஆகவில்லை. நான் குடும்ப சொத்துக்களின் பேரில் பாகம் கோரி அவஎண்.173/2014 என்ற வழக்கை இரண்டாம் கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததில் அது நிலுவையில் உள்ளது. தாவா சொத்தை பொறுத்து 1 மற்றும் 4 பிரதிவாதிகள் யாருக்கு கிரையம் செய்து கொடுத்தார்கள் என்றால் 1ம் பிரதிவாதி 9, 10 பிரதிவாதிகளுக்கு கிரையம் கொடுத்துள்ளார். 4ம் பிரதிவாதி யாருக்கும் கிரையம் கொடுக்கவில்லை. 9 , 10 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற கிரைய பத்திரத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். அதில் கண்டுள்ள வாசகங்கள் சரிதானா என்றால் சரியல்ல. சில விவரங்கள் தவறு என்று சொல்லுகிறேன். 9, 10 பிரதிவாதிகள் கிரையம் பெற்ற கிரைய சொத்துக்கள் உரிய மறுபயன் கொடுத்து வாங்கப்பட்டது என்றால் சரிதான். நான் என் தகப்பனார் சக்திவேலுக்கு மட்டுமே வாரிசு என்ற அடிப்படையில் உரிமை கோர இயலும் என்றும், என் பெரியப்பா சுவாமிநாதனுக்கோ,

சித்தப்பா செந்தில்சுப்பிரமணியத்திற்கு வாரிசு உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல. அதனால் நான் முன்னுரிமை அடிப்படையில் கிரையம் பெற கோரும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 1, 4 பிரதிவாதிகளை பொறுத்து இவ்வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் விவசாய பூமிகள் என்ற அடிப்படையில் முன்னுரிமை அடிப்படையில் நான் உரிமை கோர இயலாது என்றால் சரியல்ல.